1993 ஏப்ரல் 6]

மோட்டார் வைத்திருக்கின்றவர்களுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கான அந்த வழி முறைகளை ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 246, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

246—

பேச்சிப் பாறை அணையில் தூர் எடுத்தல்.

*10047—திரு. இரா. அப்பு நடேசன்:
திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, பேச்சிப்பாறை அணை தூர் எடுக்கப்படாமல் அதன் கொள்ளளவு குறைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவு மதகு மட்டத்திற்கு மேல் 4,350 மில்லியன் கனஅடி ஆகும். மதகு மட்டத்தின் கீழ் 936 மில்லியன் கன அடி i.e. Dead storage ஆக இருக்கின்றது. கடல் அணுமின் திட்டத்தின் வண்டற்படிவு ஆய்வு கமிட்டி, ஆய்வு செய்ததில் வண்டற்படிவினால் பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவில் எவ்வித பாதிப்பும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே பேச்சிப் பாறை அணையை தூர் எடுக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேச்சிப் பாறை அணையிலே கொள்ளளவு குறையவில்லை என்று கூறியிருக்கிறார்கள். பேச்சிப்பாறை அணையைத்தான் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் விவசாயிகள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 100 ஆண்டுகள் ஆகின்றன அணையைக் கட்டி. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த

கடும் மழையினால் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் மலையே இடிந்து பேச்சிப்பாறை அணையில் மண் விழுந்து உள் பகுதி நிறைந்திருக்கிறது. இது உண்மை. உண்மைக்குப் புறம்பான அளவிலே அதிகாரிகள் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகையினால், மறுபடியும் அமைச்சரவர்கள் அதைப் பற்றி விசாரித்து அணையின் கொள்ளளவை பெருக்குவதற்காகவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நல்லது செய்வதற்காகவும் பேச்சிப்பாறை அணையில் தூர் எடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைகளிலுள்ள தூர்களை எடுப்பது என்பது அதிகபட்சமான செலவினை ஏற்படுத்துகின்ற காரணத்தினாலே இது வரை அந்த திட்டம் ஆய்விலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் குறிப்பாக மழை காலங்களில் மண் அடித்துக் கொண்டு வருகிறபொழுது அவைகளுக்குள்ளே வந்து சேர்கிறது என்பதை மறுப்பதற்கு இல்லை. அப்படி வருகிறபோது அதை தடுப்பதற்கு உரிய வழிவகைகளை செய்யவேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஒரு புதிய யுக்தியை கையாண்டு கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய ஆய்வினை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே உறுப்பினர் அவர்களுடைய யோசனை வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த அணையை பொறுத்த மட்டிலே கூடங்குளம் அணு மின் நிலையம் செடிமென்டேஷன் ஆய்வுக் குழுவினர் என்று சொல்லப்படுகிற வண்டல் பிரிவு ஆய்வுக் குழுவினர் அந்த அணையை ஆய்வு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையின், பேரிலேதான், தற்போது தூர் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற ஒரு அறிக்கை கொடுத்ததற்கு பிறகுதான் நம்முடைய பொதுப் பணித்துறை அதிகாரிகள் அதை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இதிலே முன்னுக்குப் பின் முரனான தகவல் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்காக ஒரு கமிட்டி சென்று அவர்கள் ஆய்வு செய்து அதற்கு பின்னாலே அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் உறுப்பினர் சொல்லியிருக்கிற அந்த யோசனையை இந்த அரசு ஏற்றுக் கொள்ளலாம். ஏனென்று சொன்னால், காலம் காலமாக அந்த அணைகளிலே மண் வந்து விழுந்து விடுகிற காரணத்தாலே கொள்ளளவு குறைந்து, கெப்பாசிட்டி குறைந்த காரணத்தாலே தண்ணீர் பாசனத்திற்கு விடுவது பாதிக்கப்படுகிறது என்பதை நாங்கள் அறிவோம். ஆகவே இது போன்ற தொலை நோக்குத் திட்டங்களுக்காகத்தான் உலக வங்கியிலேகூட பல நிதி ஆதாரங்களைக் கேட்டுக்

கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த அணையைப் பொறுத்த மட்டிலே கீழ்க்கண்ட பிரச்சினைகள் சரிசெய்வதற்காக நாங்கள் இன்றைக்கு நடைமுறையில் வைத்திருக்கிறோம்:

(1) அந்த அணைக்கு அணுகு சாலைகள் செப்பனிடுதல்

(2) தட்பவெப்ப மழை அளவு நிலையம் ஒன்றை அமைத்தல்.

(3) கூடுதல் ஜெனரேட்டர் வைத்தல்.

(4) அதிக நுண் அலை ஹை ஃப்ரீகுவன்சி-தொலை தொடர்பு வசதி அமைத்தல். இவை போன்றவைகளுக்கு ஏற்பாடு செய்வதற்காக பொதுப் பணித் துறையினர் திட்டங்கள் தீட்டி இன்றைக்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே உங்கள் யோசனையை அரசு மேற்கொள்ளும். நானே நேரிடையாக சென்று கூட பார்வையிடலாம் என்று இந்த அரசுக்கு ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக இந்த அரசு தீவிரமாக பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிடையாக வந்து பார்வை இடுவதாக சொன்னதற்கு நன்றி. கடந்த மழை காலத்திலே அதாவது நவம்பர் மாதத்திலே பெய்த அந்த பெரு மழையிலே மலைகள் அனைத்தும் இடிந்து விழுந்ததோடு மரங்கள் அனைத்தும் அங்கே வந்து சேர்ந்ததன் காரணமாக ஃபாரஸ்ட் துறையினர் இன்னும் அந்த மரங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. இரா. அப்பு நடேசன்: ஏராளமான மண் நிறைந்து இருப்பதாகத்தான் சொல்லுகிறார்கள். கழிந்த டி.டி.சி. கூட்டத்திலே நான் சொன்னபோது அது இன்வெஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது, இன்னும் முடியவில்லை என்று கலெக்டர் முன்னாலே பதில் சொன்னார்கள். ஆகவே கருணை கூர்ந்து அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த அணையில் தூர் எடுப்பதற்கு முன் வரவேண்டும். முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்கு பின்னாலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி

அவர்கள் டேம் சேப்டி பர்ப்பஸ் என்ற ஒரு திட்டத்தை தயாரித்து—அணைகளை பாதுகாக்கின்ற திட்டம்—உலக வங்கியின் ஒப்புதலோடு 43 கோடி ரூபாய் அவர்கள் தருவதாக சொல்லி இருக்கிறார்கள். அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நம்முடைய அணைகளை எல்லாம் பலப்படுத்த வேண்டும் என்று ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே தான் இந்த அணையும் வருகிறது. அதன்படி நான் ஏற்கெனவே சொன்ன பல பணிகளை செய்ய முடியும். இது போன்ற பணிகளை செய்வதற்கு அரசு அந்த திட்டத்திலே முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 247, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

247—

சின்னபக்கலத்தில் மின்மாற்றி அமைத்தல்.

*10271—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, பச்சமலை ஊராட்சி, சின்னபக்கலத்தில் மின்மாற்றி (Transformer) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சின்னபக்கலத்திற்கு, பெரியபக்கலத்தில் வைக்கப்பட்டுள்ள மின்மாற்றி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம் மின்மாற்றியின் கொள்திறன் போதுமானதாக உள்ளதால் சின்னபக்கலத்தில் தனியாக மின்மாற்றி அமைக்கத் தேவை எழவில்லை என இந்த அரசு கருதுகிறது. ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பச்சை மலை சின்னபக்கலத்தில் வசிப்பவர்கள் அனைவரும் மலை வாசிகள். அவர்கள் 2 ஏக்கர், 5 ஏக்கர் என்று நிலம் வைத்துக் கொண்டு விவசாயம் செய்கிறார்கள். மின் அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தால் அவர்களது விவசாய பம்பு செட்டுகளில் காயில்கள் வெந்து விடுகின்றன.